ISSN : 2456-821X.

புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

==================================================================

**பொதுப்புத்திக்கு எதிரான எழுத்துமுறை = மரபு + நவீன எழுத்துகளின் இணைவு**

==================================================================

**முனைவர் ஆ.முத்தையன்**

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை (சு-2)

தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)

திருப்பத்தூர்.

==================================================================

**முன்னுரை**

நாம் அனைவரும் சிந்திக்கிறோமா என்றால் இல்லை என்றே சொல்லலாம். போலச்செய்தல் பெருகியுள்ளது. இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இதே நிலைமைதான். காரணம் தற்காலிகத் தீர்வாகப் பார்க்கும் மனநிலை அதிகம் வளர்ந்துள்ளது. பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள, கௌரவத்தை நிலைநாட்ட, தன்னடையாளத்தை வளர்க்க, செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்வதற்கு இந்தப் போலச்செய்தல் தேவைப்படுகின்றன. போலச்செய்தல் என்பது முழுவதுமாக இல்லாமல் கொஞ்சம் மாற்றினாலே போதும் சிறந்த அறிவாகத் தனித்துவம் பெற்றுவிடும் என்கிற நம்பிக்கை. ஆனால், ஒவ்வொருவருக்கும் தனிமனித இலக்கினைத் தாண்டி ‘பொது இலக்கு’ என்று ஒன்று உருவாகவேண்டும். அவ்வாறு உருவாகும்போது அது ஏற்கனவே உள்ள நடைமுறையைப் பின்பற்றாது வேறொரு தன்மையில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு வளர்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இப்படிப்பட்ட பொது இலக்குகளை யாரும் கற்பிப்பது இல்லை. காரணம் நமக்குள் புரையோடிப் போயிருக்கிற சுயநல கற்பிதங்களும் அடிமை மனநிலையும். அதற்கேற்ப உருவாக்கப்பட்டிருக்கிற பாடத்திட்டங்கள் என்று பலவற்றைக் கூறலாம்.

புதியதை ஏற்கும் மனநிலையினை வரவேற்பதில்லை; உருவாக்குவதில்லை. பொதுப்புத்தியில் ஏற்கனவே என்ன உள்ளதோ அதனை தக்கவைக்கும் முயற்சிகள் மட்டும் நடந்தேறுகிறதே ஒழிய வேறெதையும் நடக்க விடுவதில்லை. பொதுப்புத்தி என்பதை வரவேற்கிற சமூகமாக நம்முடைய சமூகம் இருக்கிறது. சான்றாக, திரைப்படத் துறையில் 'அட்டக்கத்தி' திரைப்படத்தின் இயக்குநர் ஒருமுறை கூறியது நினைவுக்கு வருகிறது. சினிமாத்துறையில் அதுவரையில் ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றிய திரைப்படங்கள் வந்திராதபோது 'அட்டக்கத்தி' முதலான ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலைக் காட்டும் திரைப்படங்கள் பெரிய அளவில் வெற்றிபெறாது. இதுபோன்ற திரைப்படங்களை எடுக்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்ட நிலையில் அப்படம் திரையிடப்பட்டது; ரசிகர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றது என்று கூறும் காணொலி. இந்த உரையாடல் ஏற்கனவே உள்ள திரைத்துறை சார்ந்த பொதுப்புத்தியினைத் தகர்த்து தனக்கான பார்வையாளர்களை அடையாளப்படுத்தியதைக் காணலாம். அதன்பிறகு அதே இயக்குநரான பா.ரஞ்சித் மெட்ராஸ், காபாலி, காலா, சார்பட்டா பரம்பரை, நட்சத்திரம் நகர்கிறது முதலான பல்வேறு திரைப்படங்களை இயக்கி பெரிய அளவில் வெற்றியும் கண்டுள்ளார். இதனைக் குறிப்பிட காரணம் அவர் ஏற்கனவே சமூகத்தால் திணித்து வைக்கப்பட்டுள்ள பொதுப்புத்திக்கு எதிராகச் செயல்பட்டுள்ளார் என்பதற்காகத்தான். அது அவருக்கான வெற்றி. அவரைச் சார்ந்த படத்தயாரிப்பாளர்களின் வெற்றியாகவும் இருந்திருக்கிறது என்பதை நினைவூட்டதான்.

**தமிழின் சுயகுணத்தைத் தேடவில்லை**

நாம் இலக்கிய வளம் நிறைந்தவர்கள். நம்முடைய இலக்கண வளம் என்பது உலக இலக்கிய உற்பத்திக்கு வழிகாட்டக் கூடியதாக இருக்கிறது. இது வெற்றுப் பெருமையல்ல. தமிழ்மொழி தனித்து இயங்கும் ஆற்றலுடையது என்பதை அறிந்திராத நிலையில் மேலைநாட்டினர் சொல்ல கொண்டாடத் தொடங்கியது நினைவிருக்கும் என்று கருதுகிறேன். அப்படி பலரும் தமிழ்மொழி இலக்கண, இலக்கிய வளங்களைச் சுட்டிச் சென்றிருக்கின்றனர். அய்யப்பணிக்கர் "தனது ஆச்சரியங்களை இவ்வளவு இறுக்கமாக வைத்து அதனை மாற்றவோ, வளர்த்தெடுக்கவோ அனுமதி அளிக்காமல் தமிழ்ச்சமூகம் உள்ளதே" என்கிறார். "இன்றைய இலக்கியத்தை அளக்கும் வல்லமை இல்லாத வெறும் இறுகிப்போன இலக்கணமாகப் பழையவற்றை வைத்து பூஜை செய்துகொண்டு வந்திருக்கிறதே என்கிறார். எனவே, இன்றைக்கு வளர்ந்திருக்கும் நாவல் போன்றவற்றை உள்ளுறையின் வளர்த்தெடுக்கப்பட்ட நவ உள்ளுறை சித்தாந்தத்தின் மூலம் அணுகவும் அளவிடவும் யாரும் மறுப்பு சொல்லாதீர்கள் என்று விண்ணப்பிக்கிறார்" என்கிறார். (பார்க்க: தமிழவன், 2023:24) இந்தக் கூற்றுகள் உணர்த்தும் செய்தி 'தமிழின் சுயகுணத்தைத்' தேடவில்லை என்பதைத்தான். தமிழின் அடையாளத்தைக் கண்டவுடன் நிறுத்திவிட்டோம். தமிழ் தனித்து இயங்கும் ஆற்றல்

பெற்றது என்பதோடு உள்ளப்பூரிப்பைப் பெரிதாக்கி விட்டோம். மீண்டும் தமிழ்த்தன்மை எவ்வாறு உள்ளது என்பதை ஆராய மறந்துவிட்டோம். பழங்கால இலக்கியங்களையும் தற்கால இலக்கியங்களையும் இணைக்க தவறிவிட்டோம். இக்கட்டுரை அதற்கான வலியுறுத்தலைச் செய்கிறது.

கா.சிவத்தம்பி "வாழும் இலக்கியமும் பழைய இலக்கியமும் தொடர்பற்ற இரண்டு இலக்கியங்கள் அல்ல. ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கும் இலக்கியங்கள்" என்கிறார். (மேலது., ப.21) ஜேம்ஸ் ஜாய்ஸ் "பழைய இலக்கியத்துக்கும் புதிய இலக்கியத்துக்கும் அறுக்க முடியாத ஒரு முடிச்சு இருக்கிறது என்று மிக வலிமையாக வற்புறுத்தியவர்" (மேலது., ப.21) என்ற கூற்றைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. பழைய இலக்கியமில்லாமல் புதிய இலக்கியமில்லை. புதிய இலக்கியத்தில் பழைய இலக்கியம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சிந்திக்க வேண்டியிருக்கிறது. தமிழின் தனிக்குணாம்சத்தைத் தேட வேண்டியிருக்கிறது என்கிற ஆவல் மேலிடுகிறது. தமிழின் தனிச்சிறப்பு என்ன? அவற்றின் அறிவு, பண்பாடு, வாழ்க்கை, வரலாறு முதலியவற்றை விரிவாக எவ்வாறு கொண்டுவரப் போகிறோம் என்கிற கேள்வி எழுகிறது. ஜார்ஜ் தாம்சன் "சங்க இலக்கியத்தை உலகப் பரம்பரை என்று சொல்லாமல் சொல்லி உள்ளார்" (மேலது., ப.16) என்று தமிழவன் சொல்வதும் மிக முக்கியம். இதனை அறிய வேண்டுமானால் நமக்குப் பிறமொழி இலக்கிய அறிவு வேண்டியிருக்கிறது. நாம் பிறமொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆராய வேண்டிய கல்விமுறையை வளர்க்க வேண்டியிருக்கிறது.

க.கைலாசபதி "வாய்மொழி வாய்ப்பாட்டு தன்மை சங்க இலக்கியத்தின் மொழியில் உள்ளது" (மேலது., ப.15) என்றும் கா.சிவத்தம்பி "சங்க இலக்கியத்தில் காணப்படும் நாடகத் தன்மைக்கும் கிரேக்க நாடகப் பின்னணிக்கும் தொடர்பு உண்டு" (மேலது., ப.15) என்று கூறுவதும் முக்கியம். ஜார்ஜ் ஹார்ட் "தமிழ்க் கவிதையிலிருந்துதான் சமஸ்கிருத கவிதை உத்தியான தொனி பாதிப்புப் பெற்றிருக்க வேண்டும் என்றார்" (மேலது., ப.15) என்கிற கூற்றும் மிக அவசியமாகிறது. சங்க இலக்கியத்தை முன்வைக்கும்போது அதன் கவிதை இயல் (சமஸ்கிருதத்தைத் தவிர) எந்த மொழியிலும் இல்லை என்பது போன்ற கூற்றுகளெல்லாம் தமிழின் தனித்துவத்தை அடையாளப்படுத்தி நிற்கின்றன. இதனை அவ்வளவு எளிதாகக் கடந்து செல்லமுடியாது.

**தமிழ்க் கோட்பாடு மற்றும் படைப்புச் சிந்தனை**

இந்த இடத்தில் தமிழவன் முன்வைக்கும் 'இக்காலத் தமிழ்ச் சிறுகதை, நாவல், நாடகம், விமரிசனம் போன்றன தமிழ்ப் பண்பாட்டின் வேரடி நிலமான சங்க இலக்கியத்தில் ஆழங்கால் பதிந்துள்ளதா?' என்கிற கேள்வி மிக முக்கியம். இக்கட்டுரையின் நோக்கமும் இதுதான்.

அதாவது, ஜார்ஜ் ஹார்ட் "உள்ளுறையைத் தமிழர்களின் கண்டுபிடிப்பு" (மேலது., ப.26) என்கிறார். இதனை ஆராயும் தன்மை இன்னும் வளரவில்லை. தமிழின் தனித்த அடையாளத்தை இனங்காணாமல் செல்கிறோம். தமிழர்கள் உருவாக்கிய அகம், புறம், ஐந்திணைக் கோட்பாடு முதலானவற்றை வளர்த்தெடுக்காமல் இருக்கிறோம். அதோடு தொல்காப்பியத்திலிருந்து உருவாகி உள்ள சங்க இலக்கியத்தின் அடிநாதமாக இருக்கிற 'உரையாடல் அல்லது கூற்று அல்லது மொழிதல் (dialogical) கோட்பாடு' என்பதும் தமிழுக்கானதுதான் என்பதை உணராமல் இருக்கிறோம். தமிழவனால் வளர்த்தெடுக்கப்பட்ட தொல்காப்பியத்தை முதன்மைப்படுத்திய உரையாடல் கற்பனையினை அடிப்படையாகக் கொண்ட மொழிதல் கோட்பாடு தமிழ்த் தன்மையை ஆராய உதவுகிறது. அக்கோட்பாடு பேசும் நான்Xநீ இருமை எதிர்வு, அர்த்தக்களம் ஆதிக்கக்களம், மேல்கீழ், நிகழ்த்தல், முன்னம், அகாலத்தன்மை, இன்மை, இடைவெளி, மௌனம், இருண்மை, முதலானப் பலவும் மரபான தமிழ்ச் சிந்தனையின் வேர்களாக இருக்கின்றன. கோட்பாடு சுட்டும் பல்குரல் தன்மை (hetroglossia), காலவரிசை (chrnotope), பன்மை (polyphony) முதலானவை மிக முக்கியம். அது தமிழரின் வாழ்வியல். தமிழரின் தனிச்சிந்தனை எனலாம். இது மொழியின் பன்முகத் தன்மையை வெளிக்கொணர்வதற்கான வாய்க்காலாக இருக்கும் என்றே நம்புகிறோம். ஏனெனில், இங்கு மொழிதான் எல்லாம். மொழியால்தான் அனைத்தும் கட்டப்பட்டிருக்கின்றன. மொழிக்கு அகமும் புறமுமான இரண்டு முகங்கள் உள்ளன. அந்தவகையில்தான் அகமும் புறமும் இணைந்து எவ்வாறு ஒரு மொழியைக் கட்டமைக்கிறதோ அதே அளவில் மரபிற்கும் தற்காலத்திற்கும் ஒரு பிணைப்பு உண்டு என்கிறோம். இரண்டும் ஒன்றையொன்று விலக்கிக் கொள்வதில்லை. ஒன்றின் தாக்கம் மற்றொன்றில் இருக்கும்.

**சிந்தனைகளின் தொடர்ச்சி**

குறிப்பிட்ட சிலர் மட்டும் ஆதிக்கம் பெறுவதைத் தடுப்பதற்காகவும், சமூகத்தால் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட புறந்தள்ளப் பட்டவர்களுக்கான பிரதிநிதித்துவத்தைப் உறுதிப்படுத்தவும் சமூகநீதியைப் பேணுவதற்கும் இடஒதுக்கீடுமுறை கொண்டு வரப்பட்டது. பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் என்பதை இந்தப் பின்னணியில் புரிந்து கொள்ள வேண்டும். இருப்பினும் இன்றளவிலும் திருக்கோயில்களில் பூசைகளை நடத்துபவர்கள் பார்பனர்களாக மட்டுமே உள்ளனர். காலம் காலமாகப் பின்பற்றப்படும் நடைமுறை என்கின்றனர். (ஆவணமான சங்க இலக்கியம் அவ்வாறு சொல்லவில்லை.) சமூகநீதி என்று வருகிறபோது இம்முறைமீது கேள்வி எழுகிறது. அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற வழிமுறை சட்டப்படி உருவாக்கப்படுகிறது. ஒருசாரார் (பார்ப்பனர், பார்பனச் சிந்தனையை ஏற்றவர்கள்) ஏற்கனவே உள்ள நடைமுறையின் மீது தாக்குதலைத் தொடுப்பதாகக் குற்றச்சாட்டு எழுப்புகின்றனர். மற்றொருசாராரிடம் சமூகநீதி காப்பாற்றப்

பட்டுவிட்டது என்கிற நடைமுறை திருப்தி. பிரதிநிதித்துவம் கிடைத்து விட்டதற்கான சிறுமகிழ்ச்சி. இதேநிலைதான் 'பெண்களுக்கான உரிமைதொகை' என்பதும். இல்லத்தரசி என்னும் பெயரால் பெண்களின் உழைப்புகள் தொடர்ந்து சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், அவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் இதுவரை சமூகம் கடைபிடித்து வருகிற பெண்கள் பற்றிய பொதுப்புத்திக்கு மாறாக அமைந்திருக்கிறது. இத்திட்டம் பெண் விடுதலையின் அங்கமாக மாறியிருக்கிறது. இதில் சாதக, பாதகச் சூழலும் இருக்கலாம். இருப்பினும் இவை எதுவும் திடீரென உருவாகவில்லை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். ஒன்று மற்றொன்றின் மீது தாக்கத்தை (ஆதிக்கத்தை) ஏற்படுத்தும். ஆதிக்கம் ஏற்படும்போது அதற்கெதிரான நடவடிக்கைகள் தொடர்வது எதார்த்தம். இது ஒரு சங்கிலித்தொடர். அவ்வாறுதான் மரபு, தற்காலம் என்னும் இரண்டையும் இணைத்துப் பார்க்க வேண்டும். இணைக்கும்போதுதான் அறிவியல் உண்மைகளைப் பெறமுடியும். இணைக்கும்போதுதான் இயற்கை, செயற்கை உணர்வுகளைப் பெறமுடியும். இருப்பது, இன்மையின் தெளிவு கிடைக்கும். வந்தேறியவர்கள் யார்? வந்தேறிய சிந்தனை எது என்பது விளங்கும்.

கார்ல் மார்க்ஸ் பற்றிக் குறிப்பிடும் தமிழவன், "கார்ல் மார்க்ஸ் பழைமையைத் தற்கால பிரக்ஞையோடு அணுக வேண்டும் என்று கற்றுக் கொடுத்திருக்கிறார்" (மேலது., ப.34) என்கிறார். அவருக்குப் பழைய இலக்கியம் பயன்பட்டிருக்கிறது. இதுமிக முக்கியமான சிந்தனை. அவருடைய கருத்தோடு நாமும் இணைந்தாக வேண்டும். கார்ல் மார்க்ஸ் என்கிற அறிவியல் அறிஞனுக்கு உதவி செய்தது பழைய இலக்கியம். அவர் நவீனமானவராக அறியபட்டதற்கான காரணம் அவர் சமூகத்திய பழைய இலக்கியங்கள்தான் அவரைச் சிந்தனையாளராக, நவீனச் சிந்தனையாளராக உற்பத்தி செய்திருக்கிறது. அதுவரை நம்பப்பட்டிருந்த பொதுப்புத்திக்கு எதிராகச் சிந்தித்ததினால்தான் உலக விடுதலைக்கான தலைவராக, அறிவார்ந்தவராக அடையாளப் பட்டிருக்கிறார். ஆனால், நாம் பழைய இலக்கியத்தைக் கவனத்தில் கொள்வதில்லை. பூசாரிகள் போல சங்க இலக்கியத்தை அணுகுகிறோம் என்கிற கூற்று நமக்கு மிகவும் பொருந்திப் போகும்.

**தற்கால இலக்கியத்தில் உள்ள ஆபத்து**

தற்கால இலக்கியங்களில் பெரும் ஆபத்துகளும் நிறைந்திருக்கின்றன. அவை பெரும்பாலும் பொதுப்புத்தி மனோபாவத்தோடு எழுதப்படுவதாக இருக்கின்றன. இந்த எழுத்துமுறை ஆபத்தானது. தற்கால சிந்தனையில் மொழிதான் எல்லாம். மொழி குறித்தான பார்வை இல்லாது எழுத வருவது என்பது மிகவும் ஆபத்தானது. மிகச் சிறந்த எழுத்தாளர்கள் என்று சொல்லக்கூடிய பலரிடமும் பொதுப்புத்தியை உணராது **பொதுப்புத்தியை**

அடிப்படையாகக் கொண்டு கதை எழுதுவதைக் காணமுடிகிறது. வ.வே.சு. தொடங்கி கு.ப.ரா., புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், அசோகமித்திரன், மேலாண்மை பொன்னுசாமி, இமையம், அழகியப் பெரியவன், குட்டிரேவதி உள்ளிட்ட பலரிடமும் காணமுடியும்.

சான்றாக, மேலாண்மை பொன்னுசாமி கதைகளைப் பார்க்கலாம். யதார்த்தப் படைப்புகளாக பெரும் வரவேற்பிற்குள்ளாகின்ற எழுத்துமுறையாக அவருடைய எழுத்துக்கள் இருக்கின்றன. அவ்வெழுத்துகளுக்குள் பொதுப்புத்தியைக் கொண்டு இணைக்கும்போது அதற்குள் ஆபத்து தன்மை இருப்பதை உணர வேண்டியிருக்கிறது. 'மின்சாரப்பூ' எனும் தொகுப்பில் உள்ள அனைத்து கதைகளும் அதற்கு சான்றாகக் கூறலாம். 'பூநெஞ்சத்தீ' என்னும் கதையில் விஜயாவிற்கு 'வைராக்கிய மனுஷி' என்னும் பெயர் கிடைக்கிறது. கணவனை இழந்த பெண் பல்வேறு துயரங்களைத் தாண்டி நிற்கிறாள் என்பது வரவேற்க வேண்டிய விசயம்தான். ஆனாலும் இப்பெயருக்குப் பின்னால் அவள் சந்திந்துள்ள இடர்பாடுகளை அவ்வளவு எளிதாகக் கடந்துவிட முடியுமா என்றால் இல்லை. அவருக்குக் கிடைத்துள்ள பெயர் சமூக பொதுப்புத்தி உருவாக்கியது. அது சமூகமொழி. இம்மொழி ஒரு 'தன்னிலை அழிப்பைச்' செய்திருக்கிறது. அதனை வரவேற்கும் விதமாகத்தான் சமூகம் இப்பெயரைச் சூட்டி மகிழ்கிறது. அதற்காக, சமூகத்தோடு முரண்கொள்ள வேண்டுமா என்றால் இல்லை. சமூகக் கட்டுப்பாட்டைப் புரிந்துகொள்ள சொல்கிறோம். தனிமனித உணர்வு மறுக்கப்பட்டுச் சமூக உணர்வு மேலோங்க செய்வது என்பது வாழ்க்கைக்கான அடையாளம் இல்லை. இங்கு தனிமனிதன் இல்லாமல் சமூகம் இல்லை. ஒவ்வொரு தனிமனிதனின் உணர்வுகளுக்கும் சமூகம் மதிப்பளிக்க வேண்டும். அவ்வாறு மதிப்பளிக்கும் சமூகம்தான் குற்றம் குறைகளில்லாத சமூகமாக வளரும். அனைத்து வளங்களும் அனைவருக்கும் பொது என்கிற சூழல் உருவாகும். அவ்வாறில்லாமல் பெரும்பான்மை மனநிலையில் இருந்து தனிமனிதனைக் கட்டுப்படுத்தும் கொள்கைகள் பெரும் ஆபத்தை விளைவிக்கும். நோய்க்கூறுகள் (குறைகள்) நிறைந்த சமூகமாக **உருமாறும்.**

சங்க இலக்கியங்களில் வரும் தோழி, செவிலி, நற்றாய் முதலான பல கதாப்பாத்திரங்களைப் பார்க்கும்போது அங்கு 'தன்னிலை உருவாக்கத்திற்கான' நடைமுறைகள் இருப்பதைக் காணமுடிகின்றன. தலைவியின் காதலை வரவேற்று காத்து நிற்கும் சூழல் நிலவுகிறது. தற்கால இலக்கியங்களில் இதுபோன்ற தன்மை அதிகம் வளரவில்லை. இமையத்தினுடைய 'சாவுச்சோறு' கதையில் இக்கூறு உள்ளதைக் காணலாம். மகளைச் சந்தித்து ஆபரணங்களைக் கொடுக்க வேண்டும் என்கிற விருப்பம் தன்னிலையை வரவேற்கும் தாயின் விருப்பமாக உள்ளதைக் காணலாம். இத்தொகுப்பில் உள்ள பிற கதைகளும் தன்னிலைகளை அடையாளப்படுத்தும் கதைகளாக இருக்கின்றன.

தற்கால இலக்கியங்களில் வெளிப்படும் பெரும்பாலான கதைகள் **பொதுப்புத்திக்குச் சார்பாக** எழுதப்படுகின்றன. அவை உருவாக்கும் சிக்கல்கள் மாற்ற இயலாத ஒன்றாகவே வருகின்றன. சான்றாக, சாதிய மோதல்களைச் சுட்டலாம். இம்மோதல்கள் காலத்திற்கும் இருந்துகொண்டுதான் இருக்கும் என்கிற பொதுப்புத்தியைத் தொடர்ந்து பலமுனைகளிலிருந்தும் கட்டப்பட்டுக் கொண்டே வருக்கின்றன. எழுத்திலும் அவை இடம்பெறுகின்றன. மேலாண்மை பொன்னுசாமியின் சூரியத்தேர், மின்சாரப்பூ ஆகிய கதைகள் சாதிய வன்முறைகளுக்கு அஞ்சி அதனை ஏற்க வைக்கிற கதைகளாகச் சுட்டலாம். சங்க இலக்கியங்களில் இப்பண்புகள் இல்லை. அது எதிர்ப்பு வடிவமாக இருக்கிறது. இதனை மாற்ற வேண்டுமென்றால் பொதுப்புத்திக்கு எதிரான எழுத்து மனநிலை தேவைப்படுகிறது. ஆதரவான எழுத்துக்கள் அல்ல. இமையத்தினுடைய 'செல்லாதபணம்' பெருமாள் முருகனின் 'பூக்குழி'யும் அப்படிப்பட்ட எழுத்துமுறை ஆபத்தைதான் கொண்டிருக்கின்றன. படைப்பாசிரியருக்கு அந்நோக்கம் இல்லாமலிருக்கலாம். ஆனால், எழுத்து முறையில் கதைசொல்லியின் வாயிலாகத் தானாக வந்து சேர்ந்துவிடும். காரணங்கள் பல உள்ளன. கதைகளுக்குள் வெளிப்படும் பொதுப்புத்தி சார்புத்தன்மை, பன்மைத்துவத்தைக் உருவாக்காமல் இருப்பது உள்ளிட்டவற்றைச் சுட்டலாம்.

அசோமித்திரனின் 'அப்பாவின் சிநேகிதர்' எனும் தொகுப்பைப் பார்க்கும்போது, அதனை, 1. சாதிய சீர்திருத்தம் (புதிர், இன்று நிம்மதியாகத் தூங்க வேண்டும்), 2. சமத்துவம், சகோதரத்துவம் (அப்பாவின் சிநேகிதர், சாயம், பிப்லப் சௌதுரிக்கு கடன்மனு, முனீரின் ஸ்பானர்கள், சில்வியா முதலான), 3. சமூக பொதுப்புத்தியை அப்படியே ஏற்கும் (ரோசம், இப்போது குண்டு வெடித்தது) கதைகள் என்று மூன்றாக வகைப்படுத்தலாம். இவை சமூகத்தை வலுப்படுத்தும் கதைகளாக மேலோட்டமாகத் தெரிந்தாலும் அதனுள் ஒலிக்கும் குரல் வேறொன்றாக இருக்கிறது. அக்கதைகளுக்குள் வரும் பொதுப்புத்திக்கு எதிரான குரல் எதை வலியுறுத்துகின்றன என்பதை கவனிக்க வேண்டியிருக்கிறது. அதாவது, சுயசாதி விமர்சன பார்வையோடு எழுதப்பட்டிருக்கிற கதைகள் பொதுப்புத்திக்கு எதிரான கதைகளாகக் கருதலாமா? என்றால் இல்லை. அக்கதைகளுக்குள் சாதியைக் காப்பாற்றும் முனைப்பு வெளிப்படுகின்றன. சாதிய அமைப்பைத் தக்க வைக்கும் நோக்கம் இருக்கிறது. அதாவது, சுயசாதி விமர்சனம் என்பதே சாதிய அமைப்பு வேண்டும், அதை சூழலுக்கேற்ப மாற்றியமைக்க வேண்டும் என்கிற கரிசனமே தவிர, சாதியே வேண்டாம் என்கிற இடத்திற்கு நகர்வதல்ல. அவ்வாறு சாதி வேண்டும் என்பது ஆதித் தமிழுணர்வு அல்ல. சங்க இலக்கியம் காட்டும் தமிழுணர்வும் அல்ல. தமிழ்த்தன்மை, குணம், பண்பு அல்ல. வந்தேறிய சிந்தனை. இப்படிப்பட்ட வந்தேறிய சிந்தனைகளை அடையாளப் படுத்ததான் வேண்டும். அவற்றை எதிர்க்கதான் வேண்டும். இதுதான் எழுத்தின் பொது இலக்காக இருக்க முடியும். படைப்பு

(கற்பனை) அளவிலும் எதிர்க்க முடியவில்லை என்றால் அவற்றை பொது (எல்லோருக்குமான) படைப்பாக எவ்வாறு அடையாளப்படுத்த முடியும்?. ஒவ்வொரு படைப்பாளருக்குமான பொது இலக்கு என்பதுதான் என்ன? என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன. படைப்பு என்பது தனிமனித உணர்வாக, அறிதலாக இருக்கலாம். இருப்பினும் அதற்குள் பொது நோக்கு வெளிபடுதல் அவசியம். ஏனெனில், படைப்புகளின் வாயிலாக ஒரு கூட்டுநனவிலியை உற்பத்திச் செய்கிறோம்.

அதற்காக, அழகிய பெரியவனின் தோப்பு கதையில் வருவதைபோல அல்ல. முதலாளி சாதிய, பொருளாதார அடிப்படையில் வதைப்படுத்தினான், தொழிலாளி வதைக்குள்ளானான் என்பதுதான் கதை. தொழிலாளி முதலாளி ஆனபோது இதேகாட்சிதான் என்றால் அது அதிகாரத்தையும் ஏற்றத்தாழ்வுகளையும் தக்கவைக்கிற முதலாளிய மனோபாவமே தவிர வேறொன்றுமில்லை. அடிப்பட்டவன் திமிறி எழுந்து அடித்தான் என்பது சரியான பார்வையாக இருக்கலாம். இந்த முடிவு கதை வந்த சூழலில் தேவையான சிந்தனையாக இருக்கலாம். இன்றும்கூடத் தேவையானதாக இருக்கலாம். ஆனால், இம்முதலாளிய மனோபாவம் ஆபத்தானது. அது இருக்கை மாறவில்லை, ஆள் மட்டும் மாறி இருக்கிறான் என்கிற அச்ச உணர்வையே தரும். இப்பின்னணியில் பொதுவுடைமை சமூகத்தையும் ஏற்றத்தாழ்வில்லா பன்முகத் தன்மைகளையும் அங்கீகரிக்க செய்கிற சமூகத்தை உருவாக்க நினைக்கிற பொது இலக்கிற்கான படைப்பாகுமா என்றால் இதுபோன்ற படைப்புகளையும் விமர்சனத்திற்கு உட்படுத்திதான் ஆக வேண்டியிருக்கிறது.

இம்முதலாளித்துவத்திற்கு எதிரான கலகக்குரல் சங்க இலக்கியத்தில் காணமுடியும். சான்றாக, புறநானூறு 116 ஆம் பாடலைச் சுட்டலாம். பாரி மன்னன் இறக்கும் முன் அவ்வூர் மக்கள் போருக்கு வரும் குதிரைகளை எண்ணுவது வழக்கம். தற்போது உப்பு வாணிக வண்டிகளை எண்ணும் காட்சி இடம்பெறுவதை எண்ணி வருத்தம் கொள்வதாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு வருத்தம் கொள்வதென்பது முதலாளித்துவத்திற்கு எதிரான சிந்தனை. பாரி மன்னன் வாணிகப் போக்குவரத்தை அனுமதிக்கவில்லை என்பதை இதன்வாயிலாக உணரலாம். எனவேதான், **பொதுப்புத்தி எழுத்துமுறைகளின் ஆபத்தை உணர்ந்து எழுதவேண்டும்** என்கிறோம். சார்பு தன்மையிலான எழுத்துமுறை வேண்டாம் என்கிறோம். ஒரு படைப்பை உருவாக்குவதற்கு முன்பாக நன்கு ‘முன்திட்டமிடுதல்’ அவசியம். இது தமிழவன் உருவாக்கும் எழுத்து மாதிரிகளாக வரும். தமிழுக்கே உரிய பின்நவீனத்துவப் படைப்பாக வெளிப்படும். பன்மைத்துவம் வெளிப்படும் படைப்பாக வரும். அமைப்பியல் பின்அமைப்பியல் முதலானக் கோட்பாட்டறிவு இல்லை என்றாலும் மா.அரங்நாதன் படைப்பைப் போல தமிழ்த்தன்மையோடு உருவாகும்.

**கோட்பாடு இல்லாமல் எதுவும் இல்லை**

இங்கு ஜமாலன் சொல்லக்கூடிய 'பிரதியூடக வெளியில் படைப்பிலக்கியமும் கோட்பாடும்' கட்டுரையைக் குறிப்பிட்டாக வேண்டும். படைப்பிற்குள் கோட்பாட்டுச் சிந்தனையும் உள்முகமாக இருக்கிறது எனும் சிந்தனை. அதாவது, தற்கால படைப்பைப் புரிந்துகொள்ள கோட்பாடும் கோட்பாட்டைப் புரிந்து கொள்ள இலக்கியமும் அவசியம் என்பதும் மிகமுக்கியமானது. இவை தற்காலத்திற்குத் தேவையான சிந்தனை. ஏனெனில் எல்லாவற்றிலும் அதற்கு தேவையான கோட்பாடு இருக்கிறது. உதாரணத்திற்கு நாம் உடுத்தும் மேல் சட்டைக்கும் கால்சட்டைக்கும் இலக்கணம் உண்டு. அந்த இலக்கணத்தைக் கொண்டால் மட்டுமே அதனை உற்பத்திச் செய்யமுடியும். மரங்கள் பொதுவாக எல்லாக் காலங்களிலும் பூப்பதில்லை. எல்லாக் காலங்களிலும் காய்ப்பதில்ல; கனிப்பதில்லை. எல்லாக் காலங்களிலும் இலைகளை உதிர்ப்பதில்லை. அதற்குரிய காலங்கள் வரும்போது மட்டுமே அவை பூக்கின்றன; காய்க்கின்றன; கனிகின்றன; உதிர்க்கின்றன. அதற்குள் ஒரு இலக்கணத் தன்மை உண்டு. அவைதான் அவற்றின் வாழ்க்கைக்கான கோட்பாடு. ஆக, பயன்படுத்தக்கூடிய பொருள் தொடங்கி, பிறப்பு, இறப்பு, சிந்திக்கும் அல்லது சிந்திக்காமல் இருக்கும் அனைத்திற்குள்ளும் கோட்பாடு உண்டு. கோட்பாடு இல்லாமல் எதுவும் இல்லை. அவ்வாறு இல்லை என்று சொல்பவர்கள் யாரையோ ஏமாற்றுகிறார்கள் என்பதாகவே அர்த்தம் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்தச் சிந்தனையைப் பொறுத்தி தற்கால படைப்பை வாசிப்பது என்பதும் அவசியம். அந்த அனுபவத்தைக் கொண்டு சங்க இலக்கியத்தை அணுகும்போது மார்க்ஸிற்குக் கிடைத்த பயன் நமக்கும் கிட்டும் என்பதும் உண்மை. அதனால்தான் கோட்பாட்டின் தேவையை வலியுறுத்துகிறோம். கோட்பாட்டுப் புரிதலோடு எழுத முற்படும்போது முன்கூட்டிய திட்டமிடல் தன்மை உருவாகும். பொதுஇலக்கு உருவாகும். அது ஏற்கனவே உள்ள பொதுப்புத்தியினை நிலைபேறு அடையவிடாமல் தகர்த்து எதிர்காலத்திற்குத் தேவையான புதிய பொதுப்புத்திகளை உற்பத்திச் செய்யும். உருவாக்கப்பட்ட பொதுப்புத்திகளையும் நிலைபேறு அடையவிடாமல் தடுக்கும். பன்மைத்துவத்தை உருவாக்கும். இது ஒரு இயங்கியல் தன்மையாக மாறும். சமூக மாற்றத்தினை உருவாக்கும் எழுத்துகளாக உருபெறும். அவை மரபையும் தற்காலத்தையும் உட்செரித்து உருவாகும். அப்பொழுதுதான் தமிழுக்குள் இருக்கிற 'தமிழ்ச் சனாதனத்தைக்' கட்டுடைப்புச் செய்ய முடியும். அடிமை மனநிலையை மாற்ற முடியும். இங்குதான் 'மரபுக்குள் நவீனத் தமிழிலக்கியம் வந்தால் பல புரட்சிகள் நிகழும்' என்கிற தமிழவனின் சிந்தனை நினைக்கத்தக்கது.

**துணைநின்றவை**

1. Tamizhavan, Navamarxsia Vazhiyil Dravida Tamizh Chinthanaigal Matrum Pira Katturaigal, Yethir Veliyeedu, 2023.
2. Tamizhavan, Mozhithal Kotpadum Tamizhum, Melum Veliyeedu, 2019.
3. Jamalan, Udalarasiyal, Kalakuri, 2020.
4. Ponnusamy Melanmai, Minsara Poo, Gangai Puthaga Nilaiyam, 8th edition, 2016.
5. Asokamidran, Appaavin Sinegithar, Natrinai, 2016.
6. Imayam, Saavuchoru, Crea, 2014.
7. Imayam, Sellathapanam, Crea, 2017.
8. Azhagiyaperiyavan, Azhagiyaperiyavan Kathaigal Muzhu Thoguppu, Natrinai, 2013.
9. Murugan Perumal, Pookkuzhi, Kalachuvadu, 2013.
10. Aranganathan Ma., Aranganathan Padaippugal, Natrinai, 2016.
11. Purananuuru, Po.116.